**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.98/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சச்சிதாநந்தம் | மதம் | : இந்து |
| த/பெ | : முருகேசன் | ஜாதி | : -- |
| வயது | : 72 | கிராமம் | : அம்மையார்குப்பம் |
| தொழில் : | வேளாண்மை துறை ஓய்வு | வட்டம் | : ராமகிருஷ்ணராஜ பேட்டை (ஆர்.கே.பேட்டை) |

12.09.2025

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் என் அப்பா வாங்கிய சொத்தில் நான் கடகால் போட போகும்போது பிரபாவதியும் சந்தோஷ்குமாரும் தகராறு செய்தார்கள். அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தை யார் கிரையம் வாங்கியது என்றால் என் அப்பா முருகேசன் 06.08.1981ல் கிரையம் வாங்கிய சொத்தாகும். தற்போது என் அப்பா உயிருடன் இல்லை என்றால் 2006ல் காலமாகிவிட்டார். தற்போது என் அப்பா உயிருடன் இல்லாததால் நான்தான் வாரிசு என்ற அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். நான் மட்டும்தான் ஒரே வாரிசு என்றால் எனக்கு ஒரு தம்பி இரண்டு தங்கைகள் உள்ளார்கள். இந்த வழக்கு நான்தான் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். என் அப்பாவும் என் தம்பியும் எனக்குதான் மனை என எழுதி கொடுத்து அதில் குடும்ப பெரியவர்கள் சாட்சி செய்தார்கள். அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. என் அப்பாவின் வாரிசுகள் என்ற முறையில் எனது உடன் பிறந்தவர்கள் அனைவரும் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் அல்லது அவர்கள் எனக்கு உரிமையை மாற்றிய ஆவணத்துடன் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இதுவரை அவர்கள் யாரும் ஆட்சேபணை செய்யவில்லை. ஆதியில் பிரபாவதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகளாக பிரித்து 2ம் மனையின் ஒரு பகுதியை என் அப்பா வாங்கியுள்ளார் என்றால்

ஆமாம். அதன் விஸ்தீரணம் 20 அடிக்கு 70 அடி என்றால் ஆமாம். எனது மனைக்கு நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். சுந்தரவதன நாயுடுவின் மாந்தோப்பிற்கு மேற்கு, திருவள்ளுவர் தெருவிற்கு கிழக்கு, உலகநாதன் காலி மனை வடக்கு, கதிர்வேல் வீட்டு காலி மனைக்கு தெற்கு என காட்டியுள்ளார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது மனை வரைபடத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனை வரைபடத்தில் (Layout) உள்ள 1வது மனையிடம் கோணலாக உள்ளது என்றால் ஆமாம். மனைக்கான புளூ ப்ரின்ட் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் புளூ ப்ரின்ட் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மனை எண் 3க்கும் 4க்கும் இடையே காலியிடம் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் நான் பார்த்த மனை வரைபடத்தில் அந்த காலியிடம் இல்லை.

3. ஒவ்வொரு மனையும் என்ன அளவு என்று சொல்ல முடியுமா என்றால் 40 அடிக்கு 70 அடியாகும். ஆனால் விற்பனை செய்யும்போது 20 அடிக்கு 70 அடியாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். 2 மனையாக பிரித்து பாதிப்பாதியாக விற்பனை செய்துள்ளார்கள். மனை எண்.1 ஆனது 2725 சதுரடி விஸ்தீரணம்தான் வரும் என்றால் ஆமாம். மனை எண்.1ல் பாதியான 1500 சதுரடியை பழனி என்பவருக்கு விற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. பழனி அந்த சொத்தில் காசி செட்டிக்கு விற்றுள்ளார் என்றால் காசி செட்டி தற்போது அங்குதான் உள்ளார். மனை எண்.1500 சதுரடி போக 1275ஐ உலகநாதன் என்பவருக்கு விற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவரது பிள்ளைகள் செய்த 20.03.2009ம் தேதியிட்ட பாகப்பிரிவினையில் 1400 சதுரடி என விஸ்தீரணம் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதியுள்ளதாகதான் நானும் கேள்வி பட்டேன். மனை எண்.2ன் ஒரு பகுதியை என் அப்பா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். மனை எண்.2ன் முழு விஸ்தீரணம் 2800 சதுரடி என்றால் அனைத்தையுமே 2800 சதுரடியாகதான் பிரித்து வைத்துள்ளார்கள்.

4. அந்த 2800ஐ தெற்கு பக்கம் 1400 சதுரடியை என் அப்பா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் என் அப்பா 1400 சதுரடி கிரையம் வாங்கியது உண்மை. அதனடிப்படையில்தான் என் அப்பாவின் வாரிசு என நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். வடக்கு பக்கம் யாருக்கு விற்றார்கள் என்றால் வையாபுரி

என்பவருக்கு 2800 சதுரடியை விற்றுள்ளார்கள். என் அப்பாவிற்கு 1400 சதுரடி விற்றது போக பூமியில் 1400 சதுரடிதான் விற்க முடியும் என்றாலும் தவறுதலாக 2800 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் பிரபாவதிதான் அவ்வாறு எழுதியுள்ளார். என் அப்பா அந்த தவறை கண்டுபிடித்து வையாபுரியிடம் கேட்டார் என்றாலும் அதற்காக வையாபுரி என் அப்பாவிற்கு பதிவு செய்யாத பத்திரத்தில் தனக்கு 1400 சதுரடி மட்டும்தான் உரிமை என எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் 02.01.1985ல் என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது. அதனால் என் அப்பா அந்த கடிதம் எழுதி வாங்கவில்லை. என் அப்பவிடம்தான் அந்த அசல் கடிதம் உள்ளது என்றாலும் புகைப்பட நகல்தான் பிரதிவாதி கைவசம் உள்ளது என்றாலும் அப்படி எந்த ஆவணமும் என் கைவசம் இல்லை.

5. வையாபுரி என் அப்பாவிற்கு தனக்கு 1400 சதுரடி மட்டும்தான் பாத்தியம் என ஒப்புக்கொண்டு கடிதம் எழுதி கொடுத்த பின்பு மீண்டும் மோசடியாக சாலம்மாள் என்பவருக்கு 2800 சதுரடியை தெற்கு பக்கம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் பிரச்சனை என்று வரும் போது ஆவணத்தை பார்த்த போதுதான் எனக்கு தெரியும். சாலம்மாளுக்கு விற்ற பகுதிதான் என் அப்பா ஏற்கனவே கிரையம் பெற்ற சொத்து என்றால் எங்களுக்கு ரத்து எதுவும் செய்யவில்லை. வடக்கு பக்கத்தை வரதராஜ் என்பவருக்கு 1400 சதுரடியை விற்பனை செய்துள்ளார் என்றால் ஆமாம். வரதராஜுக்கு வடக்கு பக்கம் விற்பனை செய்த பின்பு எங்களது சொத்தை சாலம்மாளுக்கு வையாபுரி விற்பனை செய்துள்ளார் என்றால் தவறு. வரதராஜ் R. பிரபாவதிக்கு 1400 சதுரடியை விற்றுவிட்டார் என்றால் ஆமாம். சாலம்மாள் 1400 சதுரடியை 1991ல் R. பிரபாவதிக்கு அதிகார முகவர் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். R. பிரபாவதி 2800 சதுரடி நிலத்தையும் டில்லிபாபு என்பவருக்கு 2014ல் விற்பனை செய்துள்ளார் என்றால் ஆமாம்.

6. என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தை வையாபுரி தவறாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தவறுதான். எங்களுக்கு யார் விற்றார்களோ அவர்களை தான் நான் கேள்வி கேட்க முடியும். நான் சாலம்மாள், வையாபுரி, R. பிரபாவதி ஆகியோர்களையும் இவ்வழக்கில் முக்கிய தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் எங்களுக்கு யார் விற்றார்களோ அவர்களை தான் நான் கேள்வி கேட்க முடியும். மனை எண்.3 வடக்கு பக்கம், தெற்கு பக்கம் என

இரண்டாக பிரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வடக்கு பக்கம் அண்ணாமலை தெற்கு பக்கம் சிதம்பரம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். தெற்கு பக்கம் முருகேசன் என்பவர் 1400 சதுரடி வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை நில அளவையர் அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மறறும் வரைபடத்தில் 3, 4 மனைகளுக்கு இடையே உரிமையாளரின் சொந்த இடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை.

7. எனக்கு கிரையம் கொடுத்த பிரபாவதியின் மகன் பெயர் சந்தோஷ் குமார் என்றால் ஆமாம். சந்தோஷ் குமாருக்கு மனை.3, 4 க்கு இடையே உள்ள 2400 சதுரடியை பிரபாவதி 2014ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் 1981ல் எனக்கு கிரையம் கொடுத்த நிலத்திற்கு 2014ல் எப்படி தான செட்டில்மெண்ட் எழுதி வைக்க முடியும். எனது இடத்தை தான செட்டில்மெண்ட் எழுதவில்லை என்றாலும் 3, 4 மனைகளுக்கு இடையே உள்ள உரிமையாளரின் சொந்த இடமான 2400 சதுரடியைதான் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றாலும் இல்லை. சந்தோஷ் குமார் அதில் 770 சதுரடியை 12.09.2014ல் அருள்மிகு திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு தானம் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சந்தோஷ் குமார் அந்த இடத்தில் குடிசை வீடு அமைத்து இரவு காப்பாளர் வைத்து மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் இல்லை.

8. 31.07.2014ல் நானும் அ.வ.எண்.99/2014ன் வாதி பழனிவேலும் 97/2014ன் வாதி சிதம்பரமும் சேர்ந்து அந்த குடிசை வீடு இருந்த இடத்தில் அத்துமீறி நுழைந்து இரவு காப்பாளரை அடித்து கம்பி வேலியை அப்புறப்படுத்தி குடிசையை அடித்து உடைத்துள்ளோம் என்றால் இல்லை. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் என் பெயரில் எதுவும் இல்லை. பழனியின் மனைக்கு தவறாக நான்கு எல்லை எழுதப்பட்டதையும் எனது மனை எண்.4ல் விஸ்தீரணம் தவறாக எழுதப்பட்டதையும் வைத்து கொண்டு நானும் அ.வ.எண்.99/2014ன் வாதி பழனிவேலும் 97/2014ன் வாதி சிதம்பரமும் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் இல்லை. பிரதிவாதிகள் அவர்களது இடத்தில்தான் உரிமை கோருகிறார்கள் என்றாலும் எங்களுக்கு விற்பனை செய்த இடத்தில் உரிமை கோரவில்லை என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது

பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)